030748
21 OCT 2020

<u>சுருக்கம்</u>

பணியமைப்பு – கருவூலக் கணக்குத் துறை – திரு M.அருண், இளநிலை உதவியாளர், சார் சம்பளக் கணக்கு அலுவலகம், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை, மதுரை ஓரலகு – கருணை அடிப்படையில் 07.06.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை –வெளியிடப்படுகிறது.

<u>நிதி(கருவூலக் கணக்கு–2)த் துறை</u>

அரசாணை (3ப) எண்.18

நாள். 13.10.2020
சார்வரி, புரட்டாசி –27,
திருவள்ளுவர் ஆண்டு –2051,

படிக்கப்பட்டது:

1. சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை அவர்களின் செயல்முறை ஆணை எண்.9518/2017/நி1/U2, நாள். 05.06.2017.
2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சிர்த்திருத்த (எம்) துறை, நாள் 01.08.2018.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1)த் துறை, நாள் 23.01.2020.
4. கருவூல கணக்கு ஆணையரின் கடித ந.க. எண்: 33008/சி4/2019, நாள்23.03.2020.

*******

<u>ஆணை:</u>

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கருவூலக் கணக்கு ஆணையரின் கடிதத்தில், மதுரை மாவட்டக் கருவூல அலகில், கூடுதல் கருவூல அலுவலராகப் பணியாற்றி வந்த திரு V.மூர்த்தி என்பவர் 01.10.2015 அன்று பணியிடை மரணமடைந்ததைத் தொடர்ந்து, அவரது வாரிசுதாரர் மற்றும் மகனுமாகிய திரு M.அருண், கருணை அடிப்படையில், சார் சம்பளக் கணக்கு அலுவலகம், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை. மதுரை ஓரலகில், பணியமர்த்தப்பட்டு, 07.06.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார் என்றும், இடைநிலைக் கல்வி பள்ளி இறுதி வகுப்பில் பொதுத் தேர்வில் தேர்ச்சிப்

-2-

Scanned with CamScanner

பெற்றுள்ளார் என்றும், பணியேற்பு செய்த நாளில் நிர்ணயிக்கப்பட்ட வயது நிறைவு செய்துள்ளார் என்றும், அவரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்றும் தெரிவித்ததுடன், மதுரை சம்பளக் கணக்கு அலுவலகத்தில் பணிநியமனம் பெற்ற திரு M.அருண், இளநிலை உதவியாளரின் பணியினை, அவர் பணியில் சேர்ந்த நாளான 07.06.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கோரியுள்ளார்.

2. பார்வை, இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவர்களின் பணியை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினை பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

3. ஒன்றில் படிக்கப்பட்ட செயல் முறை ஆணையில் திரு M.அருண், (காலஞ்சென்ற திரு.V.மூர்த்தி, சல்டுதல் கருவூல அலுவலர், மதுரை மாவட்டக் கருவூல அலகு, அவர்களின் மகன்) கருணை அடிப்படையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ல் பிரிவு 17-ன் உட்பிரிவு (1)-ன்படி தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டார். மேலும் அச்செயல்முறையின்படி தனியர், மதுரை சம்பளக் கணக்கு அலுவலகத்தில், இளநிலை உதவியாளராக 07.06.2017 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

3. பார்வை நான்கில் படிக்கப்பட்ட கருவூலக் கணக்கு ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, கருணை அடிப்படையில் பணிபுரிந்து வரும் திரு M.அருண், இளநிலை உதவியாளரின் தற்காலிகப் பணிநியமனம் இளநிலை உதவியாளர் பதவியில் திருப்தி அளிக்கும் படியாக உள்ளதாலும், ஓராண்டிற்கு மேல் அப்பதவியில் பணிபுரிந்து வருவதாலும், கருணை அடிப்படையிலான நியமனத்திற்குரிய மற்றும் அப்பதவிக்குரிய அனைத்துத் தகுதிகளையும் தனியர் நிறைவு செய்துள்ளதாலும் திரு M.அருண், இளநிலை உதவியாளர் அவர்களின் பணியினை தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ல் பிரிவு 28-ன் உட்பிரிவு (1)-ன்படி தனியர் இளநிலை உதவியாளராகப் பணியேற்ற நாளான 07.06.2017 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி அரசு ஆணையிடுகிறது. மேற்கண்ட தனியர் பொருட்டு தமிழ்நாடு கருவூலக் கணக்குத் துறை பணிவிதிகளின்படி அன்னாருக்கு தகுதிகாண்பருவம் துவங்குதல் மற்றும் வரையறுக்கப்பட்ட தேர்வுகள் மற்றும் பயிற்சிகள் ஏதும் இருப்பின் அது குறித்து தக்க செயல்முறை ஆணை கருவூலக்



Scanned with CamScanner

கணக்கு ஆணையரால் வெளியிடப்பட வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

4. இவ்வாணை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அ.சா.எண்.15084/க்யூ1/2020, நாள்01.10.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.எண்.24871/ஜி2/2020, நாள் 05.10.2020–இன் இசைவுகளுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**S.கிருஷ்ணன்**

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்

திரு M.அருண், இளநிலை உதவியாளர், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை, மதுரை ஓரலகு, (அனைத்து மூலச்சான்றிதழ்கள் துறைத் தலைவர் வழியாக)

கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை–35.

செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3.

நகல்

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை - 9.

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை - 9.

இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

14.10.2020

Scanned with CamScanner